கேலோ இந்தியா - இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

231 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.5.28 கோடி ஊக்கத்தொகை!

சென்னையில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, டிச.3- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை ஐ.டி.சி. கிராண்ட் சோழா ஹோட்டலில் நேற்று முன்தினம் (01.12.2023) நடைபெற்ற சர்வதேச, தேசிய மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழாவில், 231 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.5.28 கோடி மதிப்பில் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் ரூ.8.25 இலட்சம் மதிப்பில் பாரா விளையாட்டு வீரர் ரமேஷ் அவர்களுக்கு பந்தய சக்கர நாற்காலியை வழங்கினார்.

சர்வதேச வாலிபால் கூட்டமைப்பு மற்றும் பேஸ்லைன் வென்சர்ஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்த விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சர்வதேச வாலிபால் கூட்டமைப்பு (Federation International de Volleyball) மற்றும் பேஸ்லைன் வென்சர்ஸ் (Baseline Ventures) இடையே கிளப் வேர்ல்டு சாம்பியன்ஷிப் 2024 (Club World Championship2024) மற்றும் ரூபே பிரைம் வாலிபால் சீசன் 3 (Rupay Prime Volleyball Season3) போட்டிகளை நடத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

பல்வேறு சர்வதேச, தேசியப் போட்டிகளில் பதக்கங்களை குவித்து தமிழ்நாட்டுக்குப் பெருமைத் தேடித் தந்த தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் 231 பேருக்கு மொத்தம் 5 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா போட்டிகளில் வென்ற 120 வீரர்களுக்கு மொத்தம் 1 கோடியே 40 லட்சம் ரூபாய், தேசிய குத்துச் சண்டை போட்டிகள் 2023ல் பதக்கங்களை குவித்த 53 பேருக்கு 1 கோடியே 36 லட்சம் ரூபாய், 57 ஆவது National RollerSkating Championship 2022ல் வென்ற 12 பேருக்கு மொத்தம் 33 இலட்சம் ரூபாய், SubJunior, Junior and Senior Level National Swimming Championship2021ல் பல்வேறு பதக்கங்களை குவித்த 36 பேருக்கு 1 கோடியே 39 லட்சம் ரூபாய், ஆசிய வாள்வீச்சு போட்டியில் வெண்கலம் வென்ற வீராங்கனை பவானி தேவிக்கு 4 லட்சம் ரூபாய், சர்வதேச மற்றும் தேசிய செஸ் போட்டிகளில் சாதித்த ராஜு முகம்மது - ஜமாலுதீன் அனீஸ் - விக்னேஷ், சேதுராமன் உள்ளிட்ட வீரர், வீராங்கனையருக்கு 84 லட்சம் ரூபாய் என மொத்தம் 231 வீரர், வீராங்கனைகளுக்கு 5 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவுக்கு இன்றைய தினம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் தடையாக கூடாது!

உயரிய ஊக்கத்தொகை என்றால், அதிகமான நிதி வழங்குவது என்று மட்டும் அர்த்தமல்ல. விளையாட்டில் உயரிய இடத்தை பிடித்தோருக்கான ஊக்கத்தொகை என்றும் அதற்கு அர்த்தம் உள்ளது. திறமையான விளையாட்டு வீரர்களுக்கு எந்த வகையிலும், பொருளாதாரம் என்பது ஒரு தடையை ஏற்படுத்திவிடக் கூடாது என்னும் நோக்கத்தோடு கழக அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஏற்கனவே, நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், ELITE scheme, Mission International Medal Scheme, Champions Development Scheme போன்ற திட்டங்கள் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக நடைமுறையில் உள்ளன. இதைத்தாண்டியும் விளையாட்டு வீரர்களுக்கு துணை நிற்க வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை என்னும் முக்கியமான முன்னெடுப்பை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அந்த அறக்கட்டளையின் மூலம் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளுக்கு, பயணம் மற்றும் தங்குமிடச் செலவு, விசா கட்டணம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்காக நிதியளித்து வருகிறோம். மேலும், தேசியப் போட்டிகளில் பங்கேற்க வெளி மாநிலங்களுக்குச் செல்வோருக்கும் நிதியுதவிகளை நம் கழக அரசு செய்து வருகிறது.

100-க்கும் அதிகமான வீரர்களுக்கு ரூ.4 கோடி நிதியுதவி!

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக, 100க்கும் அதிகமான வீரர், வீராங்கனைகளுக்கு இது வரை 4 கோடி ரூபாய் அளவில் நிதியுதவி அளித்துள்ளோம். நாம் நிதியுதவி அளிக்கின்றோம். அதைப் பெற்றுச் செல்லும் வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை வென்று வந்து நமக்கு பெருமையை சேர்க்கின்றனர். குறிப்பாக மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் திறமையை நாம் பாராட்டியே ஆக வேண்டும். ஜெர்மனியில் நடைபெற்ற World Dwarf Gamesல் பங்கேற்க சென்ற நம்முடைய வீரர், வீராங்கனைகள் 8 பேருக்கு தலா 2 லட்சம் ரூபாய் வீதம் நிதியளித்தோம்.

நாம் எப்படி எதிர்பார்த்தோமோ, அதே போல, அவர்கள் அனைவரும் பதக்கங்களுடன் திரும்பி வந்தார்கள். அவர்கள், அடுத்தடுத்தப் போட்டிகளில் சாதிக்கும் வகையில், நாம் மேலும் ஊக்கத்தொகை வழங்கி வருகிறோம். செஸ் போட்டியில் பிரக்ஞானந்தா, ஹாக்கியில் கார்த்தி என சாதனை புரியும் நம் வீரர்களை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கவுரவித்து வருகிறார்கள்.

சர்வதேச செஸ் உலகக் கோப்பையில் சாதனை படைத்த பிரக்ஞானந்தாவுக்கு ரூபாய் 30 லட்சம் ஊக்கத்தொகை வழங்கினார்கள். இந்திய ஹாக்கி அணியில் இடம்பெற்ற தம்பி கார்த்திக்கு முதலமைச்சர் அவர்கள் வீடு வழங்கினார்கள். 2019 முதல் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற 160 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு கடந்த மார்ச் மாதம் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் அளவுக்கு ஊக்கத்தொகை வழங்கி வாழ்த்தினார்கள்.

தேசிய அளவிலான சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் தங்கம் வென்ற நம்முடைய வீராங்கனைகளுக்கு 60 லட்சம் ரூபாயினை ஊக்கத்தொகையாக வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்றோருக்கும் உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்களோ, அதே அளவுக்கு விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

மாணவர்கள் கலந்து கொள்ளும், எந்த நிகழ்ச்சிக்கு சென்றாலும், நான் இரண்டு விஷயங்களை கூறுவதுண்டு. ஒன்று ஆசிரியர்களுக்கு, மற்றொன்று மாணவர்களுக்கு. Maths, Science ஆசிரியர்களிடம் P.E.T வகுப்பை கடன் வாங்காதீர்கள். முடிந்தால் உங்கள் பாட நேரத்தில் மாணவர்களை விளையாட அனுமதியுங்கள் என்று கேட்டு வருகிறேன்.

அதைப் போலவே, மாணவ, மாணவியரிடம், படிப்புக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை, விளையாட்டிற்கும் கொடுங்கள் என்று எடுத்து கூறி வருகிறேன். நன்றாக விளையாடினால், உடல்நலம் மட்டுமல்ல, மனநலமும் சிறந்து விளங்கும். தமிழ்நாட்டை விளையாட்டுத்துறை தலைநகராக்க நம்முடைய கழக அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வீரர், வீராங்கனைகளின் திறமைகளை மெருகேற்றி வருகிறோம்!

அரசு, தனியார் என எங்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கிறதோ, அவற்றை பயன்படுத்தி நம் வீரர், வீராங்கனைகளின் திறமைகளை மேலும் மெருகேற்றி வருகிறோம். அதன்படி, Badminton பயிற்சிக்காக நம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கும் Jwala Gutta Badminton academy of excellenceக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோல, இன்றைக்கு Prime Volley Ball League Private Limited உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இதன் மூலம் உலகத்தரத்திலான வீரர், வீராங்கனை களை நாம் உருவாக்க முடியும்.

ஏற்கனவே, செஸ் ஒலிம்பியாட்டில் ஆரம்பித்து, உலகக் கோப்பை ஸ்குவாஷ், ஆசிய ஹாக்கிப் போட்டி, World Surfing League, Cyclothon என பல்வேறு போட்டிகளை நடத்தியுள்ளோம். மாதம் ஒரு பன்னாட்டு அல்லது தேசிய அளவிலான போட்டிகளை நம்முடைய கழக அரசு நடத்தி வருகிறது என்பதை பெருமையுடன் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக Formula4 Night Racing Circuit போட்டிகள் சென்னை தீவுத்திடலை சுற்றி வருகிற 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளன. அதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் முதன் முறையாக கேலோ இந்தியா கேம்ஸ் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளன. விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு அடையவுள்ள உயரங்கள் இன்னும் அதிகமிருக்கிறது. அதில் உங்களுக்கான பங்களிப்பும் காத்திருக்கிறது. உயரிய ஊக்கத்தொகை பெற்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும் மற்றும் மதுரை மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோரின் அறிவுறுத்தல் படியும் மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் 1ம் பகுதிக்கு உட்பட்ட 58வது வட்டத்தைச் சேர்ந்த தூய மரிய அன்னை மேல்நிலைப் பள்ளியில் நீட் விலக்குக் கோரி மாணவர்களிடமும் மற்றும் பொது மக்களிடமும் ஆரப்பாளையம் 1ம் பகுதி கழகம் மற்றும் மதுரை மாநகர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி இணைந்து மாபெரும் கையெழுத்து வாங்கப்பட்டது. உடன் மதுரை மாநகர் அவைத்தலைவர் மா.ஓச்சுபாலு, மாவட்ட துணை செயலாளர் சின்னம்மாள் பொதுக்குழு உறுப்பினர் வைகை.எம்.பரமன் மற்றும் ஆரப்பாளையம் 1ம்பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ்.மாறன் மற்றும் மதுரை மாவட்டத் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன், 58வது வட்ட செயலாளர் சீனி.ரமேஷ், வட்ட கழக செயலாளர் எம்.கே.எம்.முருகன் மற்றும் ஆரப்பாளையம் பகுதி கழக நிர்வாகிகள் ராமச்சந்திரன், பி.டி.ஆர்.பி.கண்ணன், சுகுமார், மாவட்ட பிரதிநிதி உருட்டி ரமேஷ், உதய கதிரவன், ஜெயபாண்டி,மதுரை அணி அமைப்பாளர்கள் இ.எல்.பாலா மாடசாமி மற்றும் டி.பிரகாஷ், பீட்டர், தெய்வ குமார் ரவி, முத்து, கார்த்திகேயன், ரிஷி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு

வரலாறு காணாத ஊதிய உயர்வு! முதலமைச்சருக்கு நன்றி!

தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, டிச. 3- சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி என தொ.மு.ச, பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் பல்வேறு பொருளாதார சிக்கல்கள் மற்றும் ஒன்றிய அரசினுடைய ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் போன்றவற்றால் பல்வேறு நலத்திட்டங்களுக்கு நிதியை பெறுவதில் நம்முடைய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு சிக்கல்களை சந்தித்து இந்த எதிர்ப்புகளுக்கிடையே நிர்வாகத்தை மெதுவாகவும், திறமையாகவும் (Slow but study) கொண்டு செல்கிறார்.

தமிழ்நாடு விவசாயிகள் நெல்லுக்கு அடுத்தபடியாக கரும்பு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2011 ஆம் ஆண்டில் சுமார் 166 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டன. கூட்டுறவு மற்றும் தனியார் ஆலைகள் அனைத்தும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன.

கரும்பு டன் ஒன்றுக்கு மாநில ஆதார (SAP) விலையாக ரூபாய் 550/ வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் கரும்பு உற்பத்தி 50 லட்சம் டன் அளவிற்கு குறைந்து விட்டது. ஆதார விலை என்பது அடியோடு நிறுத்தப்பட்டு விட்டது. கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகை விவசாயிகளுக்கு சென்றடையாததால் கரும்பு விவசாயத்தை கைவிடும் நிலை உருவாகியது. இதனால் கரும்பு ஆலைகளும் மூடங்கி தொழிலாளர்கள் வேலையின்றியும், உள்நாட்டுக்குத் தேவையான சர்க்கரையை கூட வெளி மாநிலங்களில் இருந்து வாங்கும் அவல நிலை உருவாகியது. இதனை போக்கும் வகையில் பல்வேறு துரித நடவடிக்கை எடுத்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர முயற்சிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களுக்கும் விவசாயிகள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டுறவு மற்றும் பொது சர்க்கரை ஆலைகளில் 2014 முதல் எந்த ஊதிய உயர்வும் அளிக்கப்படாமல் ஒரு பெயரளவிற்கு இடைக்கால ஊதியமாக அடிப்படை ஊதியத்தில் 25 சதவிகிதம் அளித்திருந்தார்கள். இதுகுறித்து வேளாண் துறை அமைச்சர் அவர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் ஊதிய நிலைகளில் உள்ள இரட்டைத் தன்மை போன்றவற்றை விளக்கிக் கூறி, வேளாண் துறை அமைச்சருடைய பெருமுயற்சியினால் தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களிடம் எடுத்துக் கூறி தற்போது கீழ்க்கண்டவாறு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

1 ஏற்கெனவே குறைந்த பட்சமாக ரூ.6800/- அடிப்படை ஊதியத்திற்கு 25 சதவிகித இடைக்கால நிவாரணம் தனி ஊதியமாக வழங்கப்பட்டதை 1.10.2022 முதல் அகவிலைப்படி ரூ.8700/-ஐ 6800/- உடன் இணைத்து ரூ.15500/-க்கு 35 சதவிகித ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த கால தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக ரூ.50,000/- ரூ.40,000/- உதவித் தொகையாகவும் கிடைக்கப் பெற்றுள்ளது.

2) இது மட்டும் அல்லாமல் அடிப்படை ஊதியம் ரூ.820/-லிருந்து ரூ.1025/- வரை ஊதிய உயர்வும் அளிக்கப்பட்டுள்ளது.

3) அகவிலைப்படி உயர்வான 1.10.2022 முதல் உயரும் புள்ளிக்கு ரூபாய் 2.60 லிருந்து ரூபாய் 2.70 ஆக ஒரு புள்ளிக்கு வீதம் வழங்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சர்வீஸ் வெயிட்டேஜ்

4) மதிப்பூதியமாக ஆறு ஆண்டுக்கு ஒரு ஊதிய உயர்வாக அவரவர் ஊதிய நிலைகளில் உள்ள புதிய ஆண்டு உயர்வு (இன்கிரீமெண்ட்) ஒன்று அவரவர்கள் பணிக்காலத்தை கணக்கிட்டு ஊதிய உயர்வாக வழங்கப்படும்.

5) இதுவல்லாமல் வீட்டு வாடகைப் படி, சலவைப் படி மாதம் ஒன்றுக்கு ரூ.1080/- உயர்த்தப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு அவரவர்களுடைய உடல் நலம் பேணுவதற்காக காப்பீட்டுத் திட்டத்தை நிர்வாகங்களே ஏற்று நடத்துவது என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் அல்லாமல் தற்காலிக தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம், காலியிடங்களை நிரப்புவதற்கு புதிய ஆட்கள் நியமிப்பது போன்ற கோரிக்கைக்கும் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்து செய்து முடிப்பதாக உறுதி அளித்துள்ளார்கள். மேலும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கையின் தன்மையை முழுமையாக உணர்ந்து தானும் ஒரு தொழிற்சங்கத் தலைவராக வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரி பெற்றுத் தந்த தாயுள்ளத்துடன் ஊதிய உயர்வு வழங்க உத்தரவிட்ட முதல்வர் அவர்களுக்கும் நல்லதொரு ஊதிய உயர்வுக்காக தொ.மு.ச. பேரவை சார்பில் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் மு.சண்முகம் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

உச்சநீதிமன்றம் மீண்டும் ஆளுநர்களுக்கு குட்டு!

சட்டத்தை செயலிழக்க, முடக்கி வைக்க அதிகாரம் இல்லை!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விளக்கம்!

சென்னை, டிச. 3- உச்சநீதி மன்றம், ஆளுநர்கள் மத்திய அரசின் நியமன உறுப்பினர்கள் என்றும் சட்டத்தை செயலிழக்க செய்யவோ, முடக்கி வைக்கவோ அதிகாரம் அவர்களுக்கு இல்லை என்றும் ஆளுநர்களுக்கு குட்டு வைத்துள்ளது. இதனை ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விளக்கமாக கூறியுள்ளது.

தினகரன்

மீண்டும் குட்டு

அது வருமாறு:-

தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா, பஞ்சாப், புதுடெல்லி, மேற்கு வங்கம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநில அரசுகள், ஆளுநர்களால் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றன. கேரளாவில் கவர்னருக்கும், முதல்வருக்கும் இடையே மிகவும் விரும்பத்தகாத மோதல் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியும் இதே போக்கை கடைபிடித்து வருகிறார். அதனால், அவரை பதவிநீக்கம் செய்யக்கோரி தமிழ்நாட்டை சேர்ந்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசு தலைவரிடம் மனு அளித்துள்ளனர். பஞ்சாப் மாநிலத்தை தொடர்ந்து, தமிழ்நாடு அரசும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது.

மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு, ஆளுநர்கள் உண்மையானவர்களாக இருக்கவேண்டும். சட்டமன்றத்தில் முறையாக நிறை வேற்றப்பட்ட ஒரு மசோதா ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்போது, ஆளுநர் தரப்பில் இருந்து எந்த முடிவும் எடுக்காமல் நிறுத்தி வைப்பது, பொதுநலனுக்கு கேடு விளைவிக்கும் செயல் ஆகும். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி இதுபோன்ற நடவடிக்கைகளை தொடர்வதால், தமிழ்நாடு அரசு, வேறு வழியின்றி உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளது. இந்த வழக்கில் உச்சநீதிமன்றம், தமிழ்நாடு ஆளுநருக்கு மீண்டும் குட்டு வைத்துள்ளது.

அதாவது, “மத்திய அரசின் நியமனமாக இருக்கும் ஆளுநர், இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 200 வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள மூன்று விருப்பங்களில் ஒன்றை பயன்படுத்த வேண்டும். மாறாக, சட்டத்தை செயலிழக்க செய்யவோ, முடக்கி வைக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. இந்த விவகாரத்தில் அளுநரே தீர்வுகாண வேண்டும். இல்லையென்றால், நாங்கள் உத்தரவு பிறப்பிக்க நேரிடும். தமிழ்நாடு ஆளுநருக்கும், தமிழ்நாடு முதலமைச்சருக்கும் இடையே தீர்க்கப்பட வேண்டிய பல விஷயங்கள் உள்ளன.

ஆளுநர் முதலமைச்சருடன் அமர்ந்து பேசி, இதை தீர்த்தால் நாங்கள் பாராட்டுவோம். முதலமைச்சரை ஆளுநர் அழைத்து பேசினால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறோம்” என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் உத்தரவு பிறப்பித்துள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுடன், ஆளுநர் மோதல் போக்கை கடைபிடிக்ககூடாது என உச்சநீதிமன்றம் வெளிப்படையாக கருத்து தெரிவித்துள்ளது. எனவே, உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஏற்று, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு முதல்வருடன் நேரில் பேச்சுவார்த்தை நடத்தி, மக்கள் நலனுக்காக தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்டுள்ள அனைத்து சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதே நல்லது.

இல்லையேல், அரசியலமைப்பு ஒழுங்கு பலவீனமடைவதற்கான குழப்பமான நிலை உருவாகும். ஆளுநரின் அரசியல் சாசன பதவி என்பது தீர்க்கப்பட்ட விஷயம். உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வுகளின் பல தீர்ப்புகள் மூலம் ஆளுநரின் அதிகாரங்களும், செயல்பாடுகளும் நன்கு தீர்க்கப்பட்டுள்ளன. இதை உணர்ந்து தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி செயல்பட வேண்டும். உண்மையான கூட்டாட்சி என்பது இந்தியாவிற்கு தற்போது தேவைப்படுகிறது. அதையும், உணர்ந்து செயல்படுவது நல்லது.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விளக்கம் அளித்துள்ளது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட ஐஸ்வர்யா கார்டன் 4–வது தெரு, ஒயிட்ரோஸ் கார்டன், ஏசுவடியான் தெரு, கணபதி நகர் முதல் தெரு, வடசேரி, அரசு பயணியர் விடுதி சாலை (குங்கம் தியேட்டர் செல்லும் சாலை, சக்தி கார்டன் 3,5,6,11–வது தெருக்கள், வணிகர் தெரு ஆகிய பகுதிகளில் ரூ.92 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் மற்றும் வேதானந்தா தெருவில் பழுதுபட்டுள்ள பேவர் பிளாக் சாலையினை ரூ.2லட்சம் மதிப்பீட்டில் மறு சீரமைக்கும் பணி ஆகிய பணிகளை மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் துணை மேயர் திருமதி.மேரி பிரின்சி லதா, சந்தோஷ், ராஜா, பாஸ்கர், ஜவகர், செல்வகுமார், அமலசெல்வன், திருமதி மோனிகா, திருமதி, அருள் சபிதா ரெக்ஸலின், பால்தேவராஜ் அகியா, திருமதி.ராணி, சுனில், திருமதி. ஆச்சியம்மாள், மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர்கள் சேக் மீரான், ஜீவா உட்பட பலர் கலந்துகொண்டனர்.